*பிரஸார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை - 4*
*17 04 2026 FRIDAY   6 45 AM*
*வணக்கம் - மாநில செய்திகள்*

*தலைப்புச் செய்திகள்*

1. மக்களவைத் தொகுதி மறுவரையறையின் மூலம், தமிழகத்தில் தொகுதிகளின் எண்ணிக்கை 39-லிருந்து 59-ஆக உயரும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

2. தமிழக சட்டப்பேரவை தேர்தலில் திமுக தலைமையிலான கூட்டணி வெற்றிபெற்று மீண்டும் ஆட்சியமைப்பது உறுதி என்று அக்கட்சியின் தலைவர் திரு. மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

3. மக்களவை தொகுதி மறுவரையறையால் தமிழகத்திற்கு எந்த பாதிப்பும் ஏற்படாது என்று மத்திய அரசு உறுதி அளித்துள்ளதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

4. சட்டப்பேரவை தேர்தலை ஒட்டி, தமிழகம் முழுவதும் சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும் என்று அரசு விரைவு போக்குவரத்துக் கழகம் அறிவித்துள்ளது.

5. ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் பஞ்சாப் அணி, 7 விக்கெட் வித்தியாசத்தில் மும்பை அணியை வென்றது.

>>>>>><<<<<<

மக்களவைத் தொகுதி மறுவரையறையின் மூலம், தமிழகத்தில் தொகுதிகளின் எண்ணிக்கை 39-லிருந்து 59-ஆக உயரும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

மக்களவையில் நேற்று தொகுதி மறுவரையறை மசோதா, அரசியல் சட்டத்திருத்த மசோதா, உள்ளிட்ட 3 மசோதாக்கள் மீதான விவாதத்தின் போது குறுக்கிட்டுப் பேசிய அவர், இந்த மசோதாக்களால் மக்களவையில் தென்மாநிலங்களின் பிரதிநிதித்துவம் குறையாது என்று தெரிவித்தார்.

மத்திய அரசு கொண்டு வந்துள்ள இந்த மசோதாவால், தென்மாநிலங்கள் உட்பட அனைத்து மாநிலங்களுக்கும் எந்த பாதிப்பும் ஏற்படாது என்றும் அவர் உறுதியளித்தார்.

சாதிவாரி கணக்கெடுப்பை நடத்த ஏற்கனவே மத்திய அமைச்சரவை முடிவு செய்துள்ளதாகவும், மக்கள்தொகை கணக்கெடுப்பின் போது சாதி குறித்த தரவுகளும் சேகரிக்கப்படும் என்றும் திரு. அமித் ஷா கூறினார்.

>>>>>><<<<<<

*தமிழக சட்டப்பேரவை தேர்தலில் திமுக தலைமையிலான கூட்டணி, 200-க்கும் மேற்பட்ட தொகுதிகளில் வெற்றிபெறும் என்று அக்கட்சியின் தலைவர் திரு. மு.க.ஸ்டாலின் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.*

*பெரம்பலூர் மாவட்டத்திற்கு உட்பட்ட குன்னம் தொகுதியில் நேற்று தேர்தல் பிரச்சார கூட்டத்தில் பேசிய அவர், இதுவரை வெளிவந்துள்ள கருத்துக் கணிப்புகள் அனைத்தும் தங்களது கூட்டணிக்கு சாதகமாக உள்ளதாக கூறினார்.*

*கடந்த ஐந்தாண்டுகளில் திமுக அரசு செயல்படுத்திய மகளிர் மற்றும் பல்வேறு தரப்பினருக்கான நலத்திட்டங்கள் மக்களிடம் அரசுக்கு நன்மதிப்பை பெற்றுத் தந்துள்ளதாகவும் திரு. மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.*

>>>>>><<<<<<

*மக்களவை தொகுதி மறுவரையறையால் தமிழகத்திற்கு எந்த பாதிப்பும் ஏற்படாது என்று மத்திய அரசு உறுதி அளித்துள்ளதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.*

*திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டையில் நேற்று நடைபெற்ற தேர்தல் பொதுக்கூட்டத்தில் பேசிய அவர், தொகுதி மறுவரையறை காரணமாக, தமிழகத்திற்கு தற்போதுள்ள மக்களவைத் தொகுதிகள் அதிகரிக்கும் என்று கூறினார்.*

*இந்த உண்மையை மறைத்து விட்டு, திமுக மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகள் தேவையற்ற முறையில் போராட்டம் நடத்துவதாக அவர் குறை கூறினார்.*

*தற்போதுள்ள மக்களவையில் திமுக தலைமையிலான கூட்டணிக்கு 39 உறுப்பினர்கள் இருந்த போதிலும், மாநிலத்தின் முக்கியமான கோரிக்கைகளை வலுவாக எடுத்துரைக்க தவறிவிட்டதாக திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டினார்.*

>>>>>><<<<<<

*மத்தியில் ஆட்சிப் பொறுப்பில் உள்ள தேசிய ஜனநாயக கூட்டணி அரசு, மாநிலங்களுக்கு வழங்க வேண்டிய நியாயமான நிதி பங்கீட்டை மறுத்து வருவதாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் திரு. பிரகாஷ் கரத் குற்றம் சாட்டியுள்ளார்.*

*தூத்துக்குடியில் நேற்று தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் பேசிய அவர். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளின் செயல்பாடுகளை மாநில ஆளுநர்களை கொண்டு மத்திய அரசு முடக்கப் பார்க்கிறது என்று தெரிவித்தார்.*

*மாநில சுயாட்சியை வலுப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையுடன் சட்டப்பேரவை தேர்தலை திமுக தலைமையிலான கூட்டணி எதிர்கொள்வதாகவும் திரு. பிரகாஷ் கரத் கூறினார்.*

*>>>>>><<<<<<*

*மக்களவைத் தொகுதி மறுவரையறை மசோதாவால் தமிழகத்திலிருந்து மக்களவைக்கு செல்லும் பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரிக்கும் என்று பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.*

*தருமபுரி மாவட்டம், பெண்ணாகரத்தில் நேற்று தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்ட அவர், இம்மசோதா குறித்து திமுக மற்றும் அதன் கூட்டணி கடசிகள் மக்களிடம் உண்மைக்கு மாறான தகவல்களை பரப்பி வருவதாக குற்றம் சாட்டினார்.*

*>>>>>><<<<<<*

*இனி தேர்தல் களம்…*

*(சவுண்ட் பைட் - மியூசிக் - 15 செகண்ட்ஸ்)*

*தமிழக சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி, தொகுதி வாரியாக எமது செய்தியாளர் வழங்கும் இந்த தொகுப்பில் இன்று இடம்பெறுகிறது தேனி மாவட்டத்துக்கு உட்பட்ட தொகுதிகள்.*

*(வாய்ஸ் பைட் - தொகுப்பு - 3 mins 33 sec..)*

*>>>>>><<<<<<*

*சட்டப்பேரவை தேர்தலை ஒட்டி, தமிழகம் முழுவதும் சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும் என்று அரசு விரைவு போக்குவரத்துக் கழகம் அறிவித்துள்ளது.*

வாக்காளர்கள் தங்களது சொந்த ஊர்களுக்கு சென்று வாக்களிக்கும் வகையில், வழக்கமாக இயக்கப்படும் பேருந்துகளுடன் சேர்த்து மொத்தம் 10 ஆயிரத்து 663 பேருந்துகள் இயக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

5 ஆயிரத்து 574 சிறப்பு பேருந்துகள், வரும் 21ஆம் தேதி முதல் 23ஆம் தேதிவரை இயக்கப்படும் என்றும், கூட்ட நெரிசலை தவிர்க்க பயணிகள் முன்பதிவு செய்து கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

>>>>>><<<<<<

இருவரிச் செய்திகள்

போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி, லெபனான் மீது நேற்றும் இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது.

>>>>>><<<<<<

ஈரான் - அமெரிக்கா இடையேயான பேச்சுவார்த்தையில் லெபனானையும் சேர்க்க வேண்டும் என்று ஈரான் நாடாளுமன்ற தலைவர் திரு. Mohammad Bagher வலியுறுத்தியுள்ளார்.

>>>>>><<<<<<

மணிப்பூரில் நேற்று ராணுவத்தினர், மாநில காவல்துறையினருடன் இணைந்து நடத்திய திடீர் சோதனையில் தீவிரவாதிகளின் 10 மறைவிடங்கள் கண்டறியப்பட்டு, அழிக்கப்பட்டன.

>>>>>><<<<<<

வீட்டு உபயோகத்திற்கான சமையல் எரிவாயு சிலிண்டர் விநியோகத்திற்கு தொடர்ந்து முன்னுரிமை அளிக்கப்பட்டு வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<

திருவாரூர் மாவட்டத்தில், சட்டப்பேரவை தேர்தலில் பயன்படுத்தப்படவுள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் சின்னங்கள் பொருத்தும் பணி நேற்று தொடங்கியது.

>>>>>><<<<<<

சட்டப்பேரவை தேர்தலில் 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி, ஈரோடு மாவட்டம், பெருந்துறையில் நேற்று மரக்கன்றுகளை நட்டு, வாக்காளர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

>>>>>><<<<<<

திருவண்ணாமலை மாவட்டம், போளூரில் தேர்தல் பறக்கும் படையினர் நடத்திய வாகன சோதனையில் 30 கிலோ போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டது.

*>>>>>><<<<<<*

***விளையாட்டுச் செய்திகள்***

*ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் பஞ்சாப் அணி, 7 விக்கெட் வித்தியாசத்தில் மும்பை அணியை வென்றது.*

*மும்பையில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில், முதலில் விளையாடிய மும்பை அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 195 ரன் எடுத்தது.*

*196 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் விளையாடிய பஞ்சாப் அணி 16 புள்ளி ஆறு ஓவரில் 3 விக்கெட் இழப்புக்கு 198 ரன் எடுத்து வெற்றிபெற்றது.*

*அஹமதாபாதில் இன்றிரவு மணி 7.30-க்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் குஜராத் அணி – கொல்கத்தா அணியை எதிர்கொள்கிறது.*

*>>>>>><<<<<<*

*ஐஎஸ்எல் கால்பந்து போட்டியில், நேற்று ஈஸ்ட் பெங்கால் – பெங்களூரு அணிகளுக்கு இடையே நடைபெற்ற ஆட்டம் 3-3 என்ற கோல்கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.*

*இன்று மாலை 5.30 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் சென்னை அணி - தில்லி அணியை எதிர்கொள்கிறது.*

*இரவு மணி 7.30-க்கு நடைபெறவுள்ள மற்றொரு ஆட்டத்தில் ஒடிசா அணி - மொஹமதன் அணியை எதிர்கொள்கிறது.*

*>>>>>><<<<<<*